**O.S. No. 63 /2022**

**Date: 04.06.2026**

**பி.வா.சா.1 கோவிந்த ராஜன்**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பி.யூ சி வரை படித்துள்ளேன். மக்கள் நல பணியாளராகவும், அதன் பின்னர் கூலி வேலை செய்தும் வருகிறேன். இந்த வழக்கில் பதில் போடுவதற்கு எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். எதிர் வழக்குரையில் முத்துராஜ் என்பவரிடம் கடன் வாங்கியதாகதான் சொல்லியுள்ளேன். வேறு யாரிடமும் நான் கடன் வாங்கவில்லை. முத்துராஜ் என்பவரிடம் கடனிற்காக கொடுத்த புரோநோட்டை திரும்பி வாங்கவில்லை என்பதாக புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் புகார் ஏதும் கொடுக்கவில்லை. தாவா கடனுறுதிச் சீட்டை நகல் எடுத்துப் பார்த்தேன். அதன் பின்னர் மேற்படி புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்பது சம்மந்தமாக நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்று நிரூபிப்பதற்கு நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. என்னுடைய கையெழுத்து என்பதால் தான் நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. கையெழுத்தை சரிபார்க்க நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக உள்ளேனா என்றால் நான் தயாராக உள்ளேன். வாதி தரப்பில் கையெழுத்து பரிசோதனைக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை கிடையாது என்று சொன்னால் வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். என்னிடம் காட்டப்படும் வக்காலத்து மற்றும் எதிர் வழக்குரையில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. மேற்படி வக்காலத்து மற்றும் எதிர் வழக்குரையில் உள்ள கையெழுத்துக்களை புரோநோட்டில் உள்ள கையெழுத்துடன் சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க எனக்கு ஆட்சேபணை ஏதும் உள்ளதா என்றால் இல்லை. வாதிக்கும், எனக்கும் விரோதம் உள்ளதா என்றால் வாதியை யார் என்றே தெரியாது. வாதியை தெரியாது என்று சொல்லி காவல் நிலையத்தில் புரோநோட்டை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று வாதிக்கு எதிராக புகார் கொடுத்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு கரிவலம் வந்த காவல் நிலையத்தில் கூறிவிட்டார்கள். காவல் நிலையத்தில் விசாரணை மேற்கொண்ட அதிகாரியை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்று கேட்டால்

அப்போது இருந்த அதிகாரிகள் யார் என்று எனக்கு தெரியாது. நான் பிறந்தது முதல் கரிவலத்தில் தான் உள்ளேன் என்றாலும், காவல் நிலையத்திற்கு எதிரே தான் எனது வீடு அமைந்துள்ளது என்றாலும் 500 அடி தள்ளி காவல் நிலையம் உள்ளது. கரிவலத்திற்குள் யார் வந்தாலும், சென்றாலும் மேற்படி காவல் நிலையத்தை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் கரிவலத்தில் அதிக நபர்களிடம் கடன் வாங்கிவிட்டு , நான் கடன் வாங்க வில்லை என்று சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு வாதியை ஏமாற்றும் நோக்குடன் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றாலும், நீதிமன்ற ஆவணங்களை சரிபார்த்தால் உண்மை துலங்கும் என்றாலும் சரியல்ல. மேற்படி புரோநோட்டில் உள்ள கடன் உண்மையானது என்றாலும், அந்த தொகையை செலுத்தி போக கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. நான் புரோநோட்டில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக கையெழுத்து செய்யவில்லை என்று மறுத்து கட்சி செய்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. பிராதில் கண்ட அசல் தொகையை செலுத்திப் போக கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.